# 1 இலங்கை எங்கள் தாய்நாடு



இலங்கை எங்கள் தாய் நாடு. இலங்கை ஸ்ரீலங்கா, இரத்தினதுபீபம், தர்மதுபீபம் என்று பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இந்து சமுத்திரத்தின் மத்தியில் இலங்கை அமைந்துள்ளது. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் எனும் நால்வகை மதங்களும் காணப்படுகின் றன. இங்கு சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் எனப் பல்லின மக்களும் வாழ்கிறார்கள்.

சிவனொளிபாதமலை, கதிரைமலை என்பன மும் மதத்தவர்களும் வழிபடுபவை. இலங்கையில் பல மன்னர் கள் நல்லாட்சி செய்தனர். புகழ்பெற்ற மகாபராக்கிரம பாகு மன்னன் இலங்கையை ஆண்டான். இவன் காலத்தில் இலங்கையிலிருந்து அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது. இலங்கை அயல்நாடுகளின் தானியக் களஞ்சியமாக விளங்கியது.

மகாசேன மன்னன் நீர்ப்பாசன வசதியைச் செய்தான். எல்லாள மன்னன் நீதி தவறா நல்லாட்சி செய்தான். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என அந்நியர் நம் நாட்டைக் கைப்பற்றி ஆண்டனர். எங்கள் வரலாற்றை மகாவம்சம், சூளவம்சம், தீபவம்சம் ஆகிய நூல்கள் கூறுகின்றன.

தேச பிதா திரு. டீ.எஸ். சேனாநாயக்க, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், அறிஞர் சித்திலெப்பை, சேர் பொன்னம்பலம் இராமநாதன், சேர் பொன்னம்பலம் அருணாசலம் ஆகிய பெரியோர் நாட்டின் மறுமலர்ச்சிக்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராடினர். எமது நாடு 1948 பெப்ரவரி மாதம் நான்காம் திகதி சுதந்திரம் பெற்றது. எமது நாட்டின் தேசிய கீதத்தை ஆனந்த சமரக்கோன் இயற்றிப் பாடினார். அதனை நல்லதம்பிப் புலவர் தமிழுக்கு பெயர்த்தார்.

எமது நாடு ஒரு விவசாய நாடே; ஆனால், அந்நிய நாட்டவரின் வருகையால் தேயிலை, இறப்பர், கோப்பி போன்றவை பயிரிடப்பட்டன. எமது நாட்டில் ஏலம், மிளகு, கறுவா, கராம்பு, சாதிக்காய் முதலிய வாசனைத் திரவியங்கள் விளைந்தன. இவை அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. எமது நாட்டிற்குப் பெருமளவு தேசிய வருமானத்தை ஈட்டித் தருவது தேயிலையே.

இலங்கை இயற்கை எழில் வாய்ந்தது. காடுகள், மலைகள், ஆறுகள், நதிகள் மலிந்தது. மலைகளில் உயர்ந்தது பீதுருதாலகால மலை. நதிகளுள் நீண்டது மகாவலி கங்கை. இது நாட்டிற்கு வளம் சேர்க்கின்றது.

இலங்கையின் இயற்கை அழகைச் சுற்றுலாப் பயணிகள் இரசிக்கின்றனர். இவர்கள் உலகமெங்கும் இருந்து வருகின்றனர். ஹிக்கடுவை, அம்பாந்தோட்டை போன்ற இடங்களை நாடிச் செல்கின்றனர்.

மத்திய மாகாணத்தின் தலைநகர் கண்டி. இங்கு புனித தலதா மாளிகை உள்ளது. பேராதனைப் பூங்கா, பல்கலைக்கழகம் என்பன பெருமை தரும் இடங்களாகும். மலையகத்தின் முக்கிய நகரம் நுவரேலியா. வட மாகாணத்தின் தலைநகர் யாழ்ப்பாணம். இங்கு பனை ஓங்கி வளர்கின்றது. நல்லூர்க் கந்தசுவாமிக் கோவில், நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில், நாகவிகாரை ஆகிய வழிபாட்டுத் தலங்கள் இங்கு உண்டு. கிழக்கு மாகாணத்தின் தலைநகர் மட்டக்களப்பு. இங்கு

நெல் உற்பத்தி செய்யப்படுகின்றது. கட்டித்தயிருக்கும் முந்திரிப் பருப்புக்கும் பெயர் பெற்றது மட்டக்களப்பு. இங்கு பத்தினித் தெய்வ வழிபாடு முக்கியத்துவம் பெறுகிறது.

இலங்கையில் ஒன்பது மாகாணங்களும் 25 மாவட்டங்களும் உள்ளன. இலங்கைத் தேசப்படத்தில் அவை காட்டப்பட்டுள்ளன. இலங்கையின் அதி உயர் பதவி ஜனாதிபதி பதவி ஆகும். அதற்கு அடுத்த நிலையில் உள்ளவர் பிரதம அமைச்சர். பிரதம நீதியரசரும் முக்கிய இடம் பெறுகிறார். ஜனாதிபதியால் நியமிக்கப்படும் அமைச்சர்களைக் கொண்டதே அமைச்சரவை.

ஒவ்வொரு அமைச்சரும் அமைச்சு ஒன்றுக்குப் பொறுப்பாக இருப்பார். ஒவ்வொரு அமைச்சுக்கும். ஒவ்வொரு செயலாளர் நியமிக்கப்படுவார். ஒவ்வொரு அமைச்சின் கீழும் பல அரசாங்கத் திணைக்களங்களும், கூட்டுத்தாபனங்களும் செயற்படும். மாவட்ட நிருவாகத்திற்கு மாவட்டச் செயலாளர் அல்லது அரசாங்க அதிபர் பொறுப்பாக உள்ளார். மாவட்டங்கள் பிரதேசங்களாகப் பிரிக்கப்படுகின்றன. பிரதேசங்களுக்குப் பொறுப்பு உள்ளவர் பிரதேச செயலாளர். நல்ல நிருவாகம் நாட்டின் அபிவிருத்திக்கு உதவும்.


இலங்கை ஒற்றுமையுடனும் சுபீட்சத்துடனும் உயர வேண்டுமென நாங்கள் அனைவரும் விரும்புவோம். எங்கள் நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்துக்காக உழைப்போம்.

## கிரகித்தற் பயிற்சி

**பூரண வாக்கியங்களில் விடை தாருங்கள்.**

1. இலங்கைக்கு வழங்கப்படும் வேறு மூன்று பெயர்கள் கூறுங்கள்.
2. இலங்கையில் வாழும் இனத்தவர்களைக் குறிப்பிடுங்கள்.
3. இலங்கையில் மிக உயர்ந்த மலை எது ?
4. இலங்கையில் எத்தனை மாகாணங்கள் உள்ளன?
5. இலங்கையின் அதி உயர் பதவி என்ன?

   ‘‘இலங்கையின் எழில்’’ எனும் தலைப்பில் அமையுமாறு எழுதுக. (100 சொற்கள்)




இலங்கைத் தேசப்படம்

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| **நாடு** | - | தேசம் |
| **தாய்நாடு** | - | சொந்த நாடு |
| **பல்லினம்** | - | பல சமூகம் |
| **திகழ்ந்தது** | - | விளங்கியது |
| **நீதி தவறா** | - | தருமம் பிழையாத |
| **அந்நியர்** | - | பிறர் |
| **எழில்** | - | அழகு |
| **சுற்றுலாப்பயணிகள்** | - | உல்லாசப் பிரயாணிகள் |
| **மகத்துவம்** | - | சிறப்பு |
| **கங்கை** | - | நதி |
| **கழனி** | - | வயல் |

## செயற்பாடு

எமது தாய்நாடு பற்றி ஆசிரியர் கூறக் கேளுங்கள்.

இலங்கையின் ஆறுகள், மலைகள், நகரங்கள் பற்றிக் கூறுங்கள்.

பாடப் பகுதியைத் தெளிவாக உச்சரித்து உரத்து வாசியுங்கள்.

இலங்கையிற் காணப்படும் அதி உயர் பதவிகள், நிறுவனங்கள், அலுவலகங்கள் என்பனவற்றை வரிசைப்படுத்தி எழுதுங்கள்.

## அறுவகைப் பெயர்

தமிழில் பெயர்கள் அறுவகைப்படும். அவை

1. பொருட்பெயர் 2. இடப்பெயர் 3. காலப் பெயர்
4. சினைப்பெயர் 5. குணப்பெயர் 6. தொழிற்பெயர்

அட்டவணையை கவனியுங்கள்.

| பொருள் | இடம் | காலம் | சினை | குணம் | தொழில் |
|---|---|---|---|---|---|
| (பொருளைக் குறிக்கும்) | (இடத்தைக் குறிக்கும்) | (காலத்தைக் குறிக்கும் | (உறுப்புகளைக் குறிக்கும்) | (பண்புகளைக் குறிக்கும்) | (செய்யும் தொழிலைக் குறிக்கும்) |
| மாம்பழம் | இலங்கை | ஆண்டு, | தலை | குணம் | ஓடுதல் |
| தேயிலை | நாடு | மாதம் | பிரிவு | பெருமை | பாய்தல் |
| தென்னை | ஆலயம் | நாள் | கிளை | நிறம் | நடுதல் |
| புத்தகம் | பாடசாலை | காலை | கொம்பு | சிவப்பு | தைத்தல் |
| பேனை | கொழும்பு | மாலை | கொப்பு | உருவம் | எழுதுதல் |
| மேசை | கண்டி | இரவு | விரல் | வட்டம் | ஆடுதல் |

நீங்கள் அறுவகைப் பெயர்களை அறிந்து கொண்டீர்கள். இப்போது பின்வரும் செயற்பாட்டைச் செய்யுங்கள்:

**செயற்பாடு**

'இலங்கை எங்கள் தாய்நாடு' என்ற கட்டுரையிலிருந்து பெயர்ச் சொற்களைக் கண்டு பிடித்து அவற்றை வகைப்படுத்துங்கள். அவற்றைக் கீழேயுள்ள அட்டவணையில் குறியுங்கள்.

| பொருள் | இடம் | காலம் | சினை | குணம் | தொழில் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**செயற்பாடு**

பின்வரும் சொற்களைப் பொருள், இடம், காலம், சினை, குணம் தொழில் என வகைப்படுத்துங்கள்.

கொழும்பு, மாலை, கால், வெண்மை, படித்தல், புத்தகம், மலைநாடு, கை, கருமை, புதன்கிழமை, கரும்பலகை, ஓடுதல்.

பொருள் : ..........................................................................

இடம் : ..........................................................................

காலம் : ..........................................................................

சினை : ..........................................................................

குணம் : ..........................................................................

தொழில் : ..........................................................................